## திருத்தம்

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025

2025, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 2462 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025" என்ற பரீட்சை அறிவித்தலில், 6.0 தகைமைகள் பத்தியின் 6.2 மற்றும் 6.3 இற்குரிய விடயங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

6.0 **தகைமைகள் :**

6.2 **தொழிற் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் தொடர்பான மூன்றாண்டுகால டிப்ளோமா பாடநெறியின் முதலாம் ஆண்டில் சிந்தியடைத்திருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகவியல் தொடர்பாக மூன்று (03) வருட கால பாடநெறியின் முதலாம் ஆண்டில் சித்தியடைந்திருந்தல்

அல்லது

(இ) நூலகவியல் தொடர்பான மேலே குறிப்பிட்ட 6.2 (அ) அல்லது (ஆ) தகைமைகளுக்கு நிகரான அல்லது அதைவிட உயர் தகைமையொன்றைப் பெற்றிருத்தல்.

(இந்தகைய தகைமைகள், குறித்த பல்கலைக் கழக அதிகாரிகள், இலங்கை நூலகச் சங்கம் மற்றும் சந்தர்ப்பத்துக்கேற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றிடம் கலந்தாலோசித்து, இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப் படும்.)

6.3 **அனுபவம் :**

(அ) (i) அரசாங்க சேவையில் (மாகாண அரசாங்க சேவை அல்லாத) திணைக்கள ரீதியான ஆரம்ப மட்ட தொழிநுட்பம் சாராத (PL-01) சேவை வகுதியின் நூலக உதவியாளர் / நூலக ஊழியர் பதவியில்

அல்லது

(ii) அரசாங்க சேவையில் (மாகாண அரசாங்க சேவை அல்லாத) நூலகத்துடன் தொடர் புடைய கடமைகளில் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் ஈடுபட்டுள்ளார் என நிறுவனத் தலைவரினால் முறைப்படி உறுதிப் படுத்தப்படக்கூடிய ஒரு பதவியில் அமர்த்தப் பட்டிருத்தல் (இவ்வாறு உறுதிப் படுத்தும்போது அது முறையான ஆவணங் களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், சமீப காலத்தில் கோப்பிடப்பட்ட சேவைச் சான்றிதழ்கள் போன்றவை ஊடாக மேற்கொள்ளப்படும் உறுதிப்படுத்தல்கள் செல்லுபடியாகாது).

பதவியில் உறுதிப்பட்டிருத்தல் மற்றும் அப் பதவியில் 10 வருட முனைப்பான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

(ஆ) மேற்கூறப்பட்ட 6.2 இன் (அ) (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்தகைமைகளில் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருப்பின், அவ் விண்ணப்பதாரிகள் மேலே 6.3 (அ) இல் (i) அல்லது (ii) இல் குறிப்பிடப்பட்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அப்பதவியில் முனைப்புடனான ஐந்து (05) வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

02. விண்ணப்பதாரிகள் பதவிக்குரித்தான அனைத்து தகைமைகளையும் 2025.12.08 ஆந் திகதிக்கு முழுமைப் படுத்தியிருத்தல் வேண்டும்.

03. அவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதோடு இத்திருத்தங்கள் காரணமாக விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2026.08.28 வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே விண்ணபித்துள்ள விண்ணப்பதாரிகள் இத்திருத்தம் காரணமாக மீண்டும் ஒரு முறை விண்ணப்பிக்கத் தேவையில்லை என அறியத்தரப்படுகின்றது.

என்.யூ. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர்
நாயகம்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, யூலை மாதம் 22.

08-95